RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22439

OPEN ACCESS

# தோட்டியின் மகன் புதினத்தில் வாழ்வியல் சிந்தனை

**சு. பால் மோகன் [அ, ஆ] *, இரா. திலகா [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), அகஸ்தீஸ்வரம்-629701, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] பதிவு எண்:18123274021001, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012, தமிழ்நாடு, இந்தியா

# Thought of Life in the Novel ‘Thotiyin Makan (Scavenger's Son)’

**S. Paulmohan [a, b, *], R. Thilaka [a]**

[a] Department of Tamil, Vivekananda College, (Affiliated to Manonmaniam Sundaranar University), Agastheeswaram-629701, Tamil Nadu, India

[b] Reg No: 18123274021001, Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012, Tamil Nadu, India

* Corresponding Author: spmohan1281@gmail.com

Received: 30-06-2022
Revised: 28-08-2022
Accepted: 06-09-2022
Published: 18-10-2022

## ABSTRACT

‘Thotti's Makan’ novel is based on the lives of people who defecate feces. Morality is based on the life of man. Accordingly, it was regarded as the foremost virtue for all living beings in the world to satisfy hunger. In general, it is instrumental literature that reflects society, and it is on the basis of this that Thotti Makan’s novel depicts the life of the scavengers living in Alappuzha town. A thorough examination of a piece of the literature reveals the background of the people at the time of its creation. Accordingly, when examining the novel of Thotti's Makan, we find that the poverty of the scavengers, the epidemic of the scavengers, the denial of education, the deaths caused by starvation, and so on; This paper aims to explore the horrors of life such as life without unity, denial of rights, religious beliefs, the self-interest of teachers, exclusion as untouchables, female slavery, alcohol addiction, etc.

**Keywords:** Religious Beliefs, Thotiyin Makan, Morality, Scavengers, Alappuzha

## முன்னுரை

தோட்டியின் மகன் புதினம் ஒரு தலித்திய புதினம் ஆகும். இந்நாவல் தகழி சிவசங்கர பிள்ளை என்பவரால் படைக்கப்பெற்று சுந்தர ராமசாமி என்பவரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நாவல் மலம் அள்ளும் மக்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டது. தோட்டிகளின் உழைப்புகள் சுரண்டப்படுதல், தோட்டிகளின் உணர்வுகள், நம்பிக்கைகள், உண்மைகள், மதிப்புகள், ஏக்கங்கள், போன்ற தோட்டிகளின் வாழ்வியல் தன்மையை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.

## சமுகத்தில் தோட்டிகளின் நிலை

சுடலைமுத்து தோட்டியாக முதல் நாள் பணிக்கு சென்றான் சமுதாயத்தில் தோட்டிகள் புறக்கணிக்கப்படுவதை பார்த்தான் உணவு விடுதிகளில் கக்கூசுகளை சுத்தம் செய்தான் அங்கே அவனுக்கு உணவுக்கு என்று தனியாக பாத்திரம் வைத்திருப்பதை பார்த்து வேதனைப்பட்டான்

அவனுக்கு நல்ல சாப்பாடு தேவையில்லை மரியாதையான உணவுக் கூட சமுகத்தில் தோட்டிகளுக்கு இல்லை என்பதை,

"மற்றொருவரின் காப்பியும், தோசையும் அவனுக்கு வேண்டாம் - ஒரு வாய்த் தண்ணீர் கிடைத்தால் அதுவே போதும். ஒரு பெண் குழந்தை தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டு போயிற்று தாகத்தாலும் களைப்பாலும் அவன் கேட்டான். ஒருவாய்த் தண்ணீர் குடுப்பியாம்மா அந்தகுழந்தை மூக்கை பொத்திக் கொண்டு ஓடிவிட்டது" (Sivasankarap Pillai, 2000).

"தீண்டாமைன்னு சொல்லிக்கிறத நானு மூணாங்கிளாஸ் படிக்கையில் கேட்டதே இல்ல இப்பிடின்னா என்னன்னு பாத்து உணர்ந்து அனுபவிச்சு அவமானப்பட்டிருக்கேன்" என்று தாழ்த்தப்பட்டவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுவதை தன் வாழ்வியல் மூலம் பாமா உலகிற்கு உணர்த்துகிறார் (Vasuki, 2007).

## தோட்டிகளுக்கு உணவு கிடைக்காத நிலை

மனிதன் சமூகத்தில் நல்ல நிலையில் வாழ்வதற்கு ஆரோக்கியமான உணவு அவசியம் அதனால் தான் மனிதனின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை வைத்தான். அதிலும் மனிதன் வாழ்வதற்கு முதன்மையானதாக உணவை வைத்தான் அதனால் தான் உணவிற்கு அடிப்படையான உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்று கூறப்படுவது வழக்கம் அதனடிப்படையில் வள்ளுவர்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்" (Ramasamy, 1991)

என்று கூறுகிறார். தோட்டியின் மகன் புதினத்தில் சுடலைமுத்து கக்கூஸ்களை சுத்தம் செய்து விட்டு தனக்கு உணவிற்காக ஒரு மணி நேரமாக காத்திருந்தும் அவனுக்கு உணவு கிடைக்கவில்லை என்பதை,

"டேய் இப்போ இங்க ஒண்ணும் தர முடியாது அந்த எச்சில் தொட்டிக்குப் பக்கத்திலே போய் நின்னுக்க யாராவது எச்சில் இலை கொண்டு வந்தா வாங்கிக்க அதிலே ஏதாவது இருக்கும்" என்ற கூற்றிலிருந்து ஒழுங்காக வேலை செய்யும் தோட்டிகளுக்கு நல்ல உணவு கிடைக்காத நிலை தான் சமூகத்தில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது (Sivasankarap Pillai, 2000)..

## மலம் அள்ளுவோரின் நிலை (தொழிலாளர்களின் நிலை)

இசக்கி முத்து 30 வருடமாக ஆலப்புழா கிராமத்தில் மலம் அள்ளும் வேலை பார்க்கிறான் வேலையில் பக்தியோடு நடந்துக் கொள்கிறான் முப்பது வருடங்களில் அவன் லீவு போட்டதே கிடையாது ஆனால் திடிரென காய்ச்சல் வந்ததால் இரண்டு நாள் லீவு கேட்டான். ஆனால் ஓவர்சீயர் அதற்கு அனுமதிக்காமல் வேறு ஆளை வேலைக்கு அமர்த்திடுவோம் என்ற கறாரான பதிலை கூறியதைக் கேட்ட இசக்கிமுத்து மனதளவில் மிகவும் வேதனைப்பட்டான். முதலாளி வர்க்கத்தினர் தொழிலாளிகளை அடிமைப் போல நடத்தியதை இதன் மூலம் அறியலாம்.

"இத்தனை வருடங்களிலும் மொத்தமாக ஆறு அல்லது ஏழு நாட்கள் தான் அவன் லீவு எடுத்திருப்பான் அப்படியிருந்தும் இரண்டு நாள் லீவு கேட்டதற்கு வேறு ஆளை வேலைக்கு அமர்த்திடுவோம் என்ற பதில் கிடைத்திருக்கிறது" (Sivasankarap Pillai, 2000).

ஏழைத் தொழிலாளர்கள் உடல்நிலை சரியில்லாத போதும் ஓய்வு எடுக்க முடியாத நிலை சமூகத்தில் உள்ளது. இப்படிப்பட்ட தொழிலாளர்களின் நிலமையை பார்த்து பாரதிதாசன்

"வாழ்வுக் கொவ்வாத - இந்த

வையத்தில் இந்நிலை எய்தப் புரிந்தோம்

ஆழ்கடல் காடு - மலை

அத்தனை யிற்பல சத்தை யெடுத்தோம்

ஈழை அசுத்தம் - குப்பை

இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்

சூழக் கிடந்தோம் - புவித்

தொழிலாள ராம் எங்கள் நிலைமையைக் கேளீர்" (Shanmugam, 2006)

## பட்டினிச் சாவு

உலகில் பல கோடி மக்கள் ஆண்டுதோறும் பட்டினியால் இறக்கின்றனர். ஐ.நா.சபையின் ஆய்வுப்படி உலகில் தினமும் 14 கோடி மக்கள் பட்டினியாக வாழ்கின்றனர். இன்றையக் காலக் கட்டத்தில் பட்டினிச்சாவு தவிர்க்கப்பட வேண்டும் என்று நமது அரசாங்கம் பல சத்தான உணவுகளை வழங்கி வருகிறது. ஆனாலும் பட்டினிச் சாவு நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. நமது நாட்டில் 2020-ம் ஆண்டு ஜார்க்கண்டில் 42 வயது நபர் ஒருவர் பட்டினியால் இறந்ததாக கூறப்படுகிறது. உயிரிழந்தவரின் மனைவி கூறும் போது "கடந்த சில நாள்களாகவே எங்கள் வீட்டில் உணவு செய்யவில்லை. எங்கள் வீட்டில் குடும்ப அட்டையோ ஆயுஸ்மான் அட்டையோ இல்லை சமைப்பதற்கு எந்த பொருளும் வீட்டில் இல்லை" (நவஎடிhயசயவ.உழஅ) இதன் மூலம் வறுமையின் கொடுமையை அறியமுடிகிறது. அது போல தோட்டியின் மகன் புதினத்தில் இசக்கிமுத்து 30 வருடமாக தோட்டியாக வேலை செய்பவன் திடீரென அவன் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 2 நாள் வேலைக்கு போகவில்லை. இரண்டு நாளாகச் சாப்பிடாமல் அவன் பட்டினியாக இறக்கிறான் என்பதை, கீழ்க்கண்டக் கூற்று மூலம் அறியமுடிகிறது.

"ஏதாவது கொண்டு வந்தியாடா தொண்டையெல்லாம் வரண்டு போச்சே இன்று வேலை அதிகம் அதுதான் வருவதற்கு தாமதம் ஆகிறது போலிருக்கிறது இருந்தாலும் இவ்வளவு தாமதம் ஏன்? நான் தண்ணீர் கூடக் குடிக்காமல் கிடப்பது அவனுக்குத் தெரியாதா" (Sivasankarap Pillai, 2000).

## தொழிலாளர்களின் பணத்தை சுரண்டுதல்

இன்றையக் காலக் கட்டத்தில் முதலாளிகள் பலர் உழைப்பவர்களின் பணத்தை பிடித்து அதன் மூலம் நல்ல வாழ்க்கை வாழ்கின்றனர். தோட்டியின் மகன் புதினத்தில் தோட்டிகளின் சம்பளத்தை மாதம் மாதம் பிடிக்கிறான். அதோடு இசக்கிமுத்துவின் உடலை முனிசிபாலிட்டியில் அடக்கம் செய்ததற்காக தோட்டிகளின் சம்பளத்தை முழுவதுமாக பிடிக்கிறான் அதனால் தோட்டிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

"நமக்குச் சம்பளம் தான் எவ்வளவு"

"அது ஓவர்சீயருக்குத்தான் தெரியும்"

"ஆனா இந்த மாதம் நமக்கெல்லாம் சரியான வெட்டு இருக்கும் இசக்கிமுத்து மாமனை அடக்கம் செஞ்ச லச்சனத்துக்கு"(Sivasankarap Pillai, 2000).

இதன் மூலம் தோட்டிகளுக்கு தங்கள் சம்பளம் எவ்வளவு என்று தெரியாத நிலை அதுபோக மாதம் மாதம் சம்பளத்தை சுரண்டவும் செய்கிறார்கள் என்பதையும் அறிய முடிகிறது. அடுத்தவர்களின் உழைப்பை சுரண்டி வாழும் முதலாளிகளை பட்டுக் கோட்டையார்,

"கொத்தும் பணக்குழு

கொள்ளைப் பெருச்சாளி

எத்திப் பிழைக்கவே

கத்தும் நரிக்கூட்டம்

ரத்தவெறி கொண்டலையும்

யுத்தப் பெருமுதலை

பித்தம் பிடித்தலையும்

பேதக் குரங்குகள்"

என்ற பாடலில் அடுத்தவர்களின் உழைப்பை சுரண்டும் முதலாளிகளை பெருச்சாளி, நரி, முதலை, குரங்கு என்று அழைப்பதை அறிய முடிகிறது.

## சுடலைமுத்து - பிச்சையாண்டி - நட்பு

மனிதனை சங்ககாலம் முதல் இன்று வரை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஒரு பந்தம் நட்பு அதனால் தான் வள்ளுவர்,

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகம்நக நட்பது நட்பு"

என்ற நட்புக்கு விளக்கம் தருகிறார் (Ramasamy, 1991). தோட்டியின் மகன் புதினத்தில் சுடலைமுத்துவின் தந்தை இறந்தவுடன் சுடலைமுத்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான் அவனுக்கு உயிருக்கு உயிராக இருந்து இசக்கிமுத்துவை தன் சொந்த அப்பா போலக் கருதி அவரை அடக்கம் செய்வது முதல் சுடலைமுத்துவுடன் இறுதிவரை உயிராக நான் இருப்பேன் என்று கூறுகிறான்.

"சுடலைமுத்துவுக்கு உதவியாக பிச்சாண்டி மட்டும் தான் இருக்கிறான் என்றுமே தான் துணையாக இருப்பதாகவும் கூறி அவன் ஆறுதலளித்திருந்தான். பிச்சாண்டியின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு சுடலைமுத்து பொருமிப் பொருமி அழுதான் 'பிச்சாண்டிக்கும் கண்ணீர் வந்தது, அவன் சுடலைமுத்துவின் கண்களைத் துடைத்தான்"

"இந்த வேலையே போயிட்டாலும் நான் ஒங்கூட இருப்பேண்டா" (Sivasankarap Pillai, 2000)

இதன் மூலம் சிறந்த நண்பர்களாக சுடலையாண்டியும் பிச்சாண்டியும் இருந்தார்கள் என்பதை அறியலாம். நாலடியாரில் நட்பின் சிறப்பை பெருமையாக கூறியுள்ளனர், என்பதை கீழ்கண்ட பாடல் மூலம் அறியலாம்,

"நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணியா ராயினும்

ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்

சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும் செய்வினைக்கும்

வாய்க்கால் அனையார் தொடர்பு" (நாலடியார் 218)

## தோட்டிகள் மதுவுக்கு அடிமையாதல்

இன்றைக்கு பல குடும்பங்கள் மதுவினால் அழிந்து வருகிறது. மதுவினால் மனிதனுக்கு நிம்மதியில்லை. நல்ல மனநிலை இல்லை. நல்ல குடும்பம் இல்லை இதனால் தான் வள்ளுவர் கள்ளுண்பவரை பெற்ற தாய்க்கும் பிடிக்காது என்று கூறியுள்ளார்.

"ஈன்றான் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்

சான்றோர் முகத்துக் களி" (Ramasamy, 1991)

வள்ளுவரின் கூற்றிற்கு ஏற்ப தோட்டிகள் சம்பளத்தை வாங்கியவுடன் மதுக்கடைக்கு சென்று நன்றாக குடிக்கிறார்கள் குடித்துவிட்டு தங்களுக்குள்ளே சண்டையிடுகிறார்கள். குடித்தவுடன் தன் குடும்பத்தையும் மறந்து சம்பளம் பணம் அனைத்தையும் வீணாக செலவு செய்கிறார்கள். அடுத்த நாள் சாப்பாட்டை பற்றிக்கூட கவலைப்படாமல் அவர்களைக் குடி ஆட்டிப்படைக்கிறது.

"சம்பளத்தில் எஞ்சியதும் கரைந்தது மட்டுமல்ல மறு மாதச் சம்பளத்தில் ஒரு பங்கைக் கடனுக்குத் தொலைக்கவேண்டிய நிலையும் வந்துவிட்டது. எல்லோரும் கள்ளுக் கடையை விட்டு வெளியேறினார்கள்" (Sivasankarap Pillai, 2000).

தோட்டிகள் தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மதுவுக்கு அடிமையானதால் தோட்டிகளின் குடும்பம் வறுமையான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. "மது தொடர்ந்து அருந்துவதால் அடிமைத்தனம் உண்டாகிறது. பக்கவாதம், மனக்கோளாறு, நரம்புத்தளர்ச்சி, வயிற்றுவலி, கல்லீரல் நோய்கள், குடல் வெந்து போகுதல், மஞ்சள் காமாலை, சிறுநீரகக் கோளாறுகள் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன".

## தோட்டிகளின் உரிமைகள் மறுக்கப்படுதல்

சாதி, மதம், பால், இனம், நாட்டுரிமை ஆகியவற்றிற்கு அப்பால் ஒவ்வொரு தனிமனிதருக்கும் உள்ள பிறப்புரிமைகளை நாம் அடிப்படை உரிமைகள் என்கிறோம். "1993 ஆம் ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த உலக மாநாட்டின் பிரகடனத்தில் மனிதன் மதிப்பிலிருந்தும் கண்ணியத்திலிருந்தும் விளைவதே மனித உரிமைகள், என்று குறிப்பிடப்பட்டுள்ளது." இதன் அடிப்படையில் தான் மனிதன் தான் வாழ்வதற்காக பிற மனிதர்களிடம் சண்டையிடுகிறான் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்த இன மக்களிடம் வாழ்நாள் முழுவதும் சண்டையிடுகிறார்கள். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை ஒருவித ஏக்கமாக உள்ளது. "மனிதர்களின் பேச்சு சுதந்திரமும், நம்பிக்கை சுதந்திரமும் பெற்று அச்சத்திலிருந்தும் இல்லாமையிலிருந்தும் விடுபட்டு வாழும்படியான உலகை மலரச் செய்வதே சாதரண மக்களின் ஏக்கமாகும்" (மேலது 2019) இதைப் போல் தான் தோட்டியின் மகன் புதினத்தில் மலம் அள்ளுவோரின் வாழ்க்கை ஒருவித ஏக்கமாக தான் உள்ளது. சமூகத்தில் வாழும் அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களுடைய வாழ்க்கைக்காக வாழ்நாள் முழுவதும் போராட்டமான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை கீழ்காணும் தொடர்கள் மூலம் அறியலாம்.

"தோட்டி முக்கியத்துவம் உள்ளவனென்றால் என்றுமே அவன் இதே வேலையைப் பார்த்துக் கொண்டு தோட்டியாகவே இருக்க வேண்டுமா? இச்சங்கம் என்றும் தோட்டியாக இருக்க விரும்புகிறவனுக்காக ஏற்பட்டது. அழுக்கிலேயே திளைத்துக் கிடப்பவனுக்கு அது போதும் சுடலைமுத்துவிற்கு அந்த எண்ணமில்லையே உரிமைகளைத் தட்டி பறிக்க வேண்டுமாம்" (Sivasankarap Pillai, 2000).

மனிதன் உரிமைகள் பெற கடுமையாக போராட வேண்டும் என்பதை ஒரு நாட்டின் விடுதலைக்கான அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

"எல்லா மனிதர்களும்

சமமாகவே

படைக்கப்பட்டிருக்கிறார்கள்

அவர்களைப் படைத்தவன்

உயிர் வாழும் உரிமை

சுதந்திரம், மகிழ்ச்சியை

நாடும் உரிமை போன்ற

அவர்களிடமிருந்து

பிரிக்கமுடியாத உரிமைகள்

சிலவற்றை அவர்களுக்கு

அளித்துள்ளான் என்னும்

உண்மைகள் தாமாகவே

விளக்கம் பெறுகின்றன"

(ஐக்கிய அமெரிக்க விடுதலைக்கான அறிக்கை 1776) இதன் மூலம் மனிதன் போராடினால் தான் மட்டுமே இவ்வுலகில் சமத்துவமான வாழ்வை பெறலாம் என்பதை அறியமுடிகிறது.

## திருமணம் - வாழ்வின் அறம்

மனிதனின் வாழ்வில் முக்கியமான அடையாளம் திருமணம் தன்னுடைய வாழ்க்கையை இன்னொரு கட்டத்திற்கு கொண்டு செல்லும் உறவு முறையாகும். நம் முன்னோர்கள் கணவன் மனைவி உறவு என்பது பூர்வ ஜன்மத்தின் பந்தம் என்பர் அதனால் தான் திருமணத்திற்கு பிறகு கணவன் மனைவி உறவு எப்படி அமைய வேண்டும் என்பதை வள்ளுவர்

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" (Ramasamy, 1991)

கணவன் மனைவி இல்லறம் நல்லறமாக மாற வேண்டும் என வலியுறுத்துகிறார். தோட்டியின் மகன் புதினத்தில் வள்ளியும் சுடலைமுத்துவும் உயிருக்கு உயிராக காதலிக்கிறார்கள் அவர்களுடைய திருமணம் பொறாமைப்படும் அளவிற்கு நடைபெறுகிறது.

"வள்ளிக்கும் சுடலைமுத்துவுக்கும் திருமணம் நடந்தது. தோட்டிகளிடையே அது ஒரு முக்கியமான நிகழ்ச்சி வள்ளி அதிருஷ்டசாலி என்று எல்லாரும் சொன்னார்கள்" (Sivasankarap Pillai, 2000).

திருமணம் முடிந்தவுடன் தன்னுடைய லட்சியங்கள் எல்லாவற்றையும் தன்னுடைய அன்பான மனைவியிடம் கூறினான். அதோடு தன்னுடைய எதிர்கால திட்டங்கள் அனைத்தையும் தன்னுடைய மனைவியிடம் கூறும் அளவிற்கு தன் மனைவி மீது அன்பும் பாசமும் வைத்திருந்தான் என்பதை கீழ்க்காணும் தொடர்கள் மூலம் அறியலாம்.

"அவள் நம்பிக்கை அது தான் சுகம் என்பதற்கு அவளுடைய பொருளும் அதுவேதான் பரஸ்பரம் அன்பு கொண்டு விட்டார் பிறகு என்ன வேண்டும்? அது தானே சுகம்" (Sivasankarap Pillai, 2000).

இதைப் போன்று கணவனுக்கு மனைவி உயிரை விட மேலான அன்பைத் தருபவள் என்ற கருத்தை வள்ளுவரும் கூறியுள்ளார்.

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்டே உள" (Ramasamy, 1991)

வள்ளியும் தன் கணவனுக்காக எந்த கடினமான சூழலையும் எதிர்கொள்ள தயார் நிலையில் தான் உள்ளாள் என்பதை,

"வாழ்வதற்காகத்தான் வேலை செய்யனும் என்பது அவளுக்குத் தெரியும் வேலை செய்வது அவளுக்குக் கஷ்டம் என்றும் தோன்றவில்லை. வேலை செய்யாமல் வாழ முடியாது. குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் அதற்காகத் தாயும் தகப்பனும் சிறிது சிரமப்பட நேரிடலாம். சில தியாகங்களை செய்யும் படி ஏற்படலாம்". (Sivasankarap Pillai, 2000).

என்று கணவனுக்காக எந்த விதமான தியாகத்திற்கும் தயாராக மனைவி இருக்கிறாள் இது தான் உண்மையான வாழ்வின் அறம் என்பதை அறிய முடிகிறது.

## சமூகத்தில் தோட்டிகளின் வறுமை

"தனியொரு மனிதனுக்கு உணவில்லை

ஜகத்தினை அழித்திடுவோம்" (Usharani, 2019)

என்றார் தேசியக் கவி. அந்தளவிற்கு மனிதனின் உணவிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர் நம் முன்னோர்கள். அதனால்தான் இராமலிங்க அடிகளார் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று மக்களின் வறுமையை நினைத்து வருந்தினார். இன்று வறுமையால் உலகில் எண்ணற்ற மக்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்கிறார்கள். மேலும் வறுமையினால் தனது உடலை விற்று அதனால் வறுமையைப் போக்கும் பெண்களையும் காண்கிறோம். இவற்றையெல்லாம் பார்க்கும் போது கொடுமையிலும் கொடுமையானது வறுமை என்பதை அறியமுடிகிறது. தோட்டியின் மகன் புதினத்தில் பிச்சையாண்டியின் குடும்பம் வறுமையினால் குடும்பத்தில் உள்ள அனைவரும் பல நாள் சாப்பாடு இல்லாமல் தவித்தார்கள் என்பதைக் கீழ்க்காணும் கூற்று மூலம் அறியலாம்.

"அலமேலு படுத்த படுக்கையாகிவிட்டாள் - எலும்பும் தோலுமாக இருந்த அவள் உடல் நீரடித்து ஊதிப்பழுத்தது. மூத்த குழந்தை பிச்சை எடுக்க பட்டணத்திற்கு போயிற்று. இரண்டாவது குழந்தை வியாதி பிடித்து கிடந்தது." (Sivasankarap Pillai, 2000).

## மத ஒற்றுமை

ஆலப்புழா கிராமத்தில் மோசமான தொற்று நோய் தொற்றிக் கொண்டது மக்கள் கொத்து கொத்தாக இறந்தனர். மருத்துவர்கள் கைவிரித்த நிலையில் மக்கள் கடவுளை நம்பினார்கள். உயிர் மீதுள்ள பயத்தினால் மக்கள் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவன் என்று வேறுபாடு இல்லாமல் வழிபாடு நடத்தினார்கள்.

"இந்துக் கோவில்களில் மட்டுமல்லாமல் கிருஸ்துவத் தேவாலயங்களிலும் அவர்களது மதச் சம்பிரதாயப்படி பூஜைகள் நடந்து கொண்டிருந்தன. இந்து முதலாளி கிறிஸ்தவக் கோயில்களில் வழிபாடுகள் நடத்தி கொண்டிருந்தனர். இந்து தன்வந்தர் இந்துக் கோயில்களில் அர்ச்சனைகள் நிகழ்த்தினர், இரவு வேளைகளில் மந்திரங்களை வாய்விட்டு கூறிய படி புகையும் நெருப்புமாக வீதிவலம் வந்தனர் முகமதியர்கள்"

இதன் மூலம் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் என்ற மத வேறுபாடுயின்றி மக்கள் நலன் தான் முக்கியம் என்று நினைத்தனர் என்பதை அறியமுடிகிறது. அதனால் தான் நாம் அனைவரும் மதத்தால் வேறுபட்டாலும் அனைவரும் பாரதத் தாயின் புதல்வர்கள் என்று போற்றுகின்றார் பாரதியார் என்பதை கீழ்க்காணும் கவிதை மூலம் அறியலாம்.

"தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்
தீயினைக் கும்பிடும் பார்ப்பர் - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்

பற்பல சண்டைகள் வேண்டாம்” (Arulmani, 2020)

## கல்வி

மனிதனின் அறியாமை என்ற இருளை அகற்ற வந்த கலங்கரை விளக்கு கல்வி. அதனால் தான் ஒருவன் கல்வி கற்பதற்காக பிச்சைக் கூட எடுக்கலாம் என்று அதிவீரராமபாண்டியன் கூறுகிறார்.

“கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே” (Meiyappan, 2009)

அந்த அளவிற்கு ஒருவனுடைய முன்னேற்றத்திற்கு கல்வி இன்றியமையாத ஒன்றாகிறது. சமூகத்தில் கல்வி தீண்டாமையை, வறுமையை ஒழிக்கும், சமத்துவத்தை உருவாக்கும் என்பதை உணர்ந்து கொண்ட சுடலைமுத்து தன் மகனுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டும் என்று தன்னுடைய மகனுடைய கல்விக்காக போராடுகிறான். ஆனால் இந்த சமூகம் தோட்டியின் மகனுக்கு கல்வி எதற்கு என்று கல்வி கற்றுத்தர சமூகம் மறுக்கிறது.

“ஏன் தெரியுமா நம்ம கொழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேத்துக்கிடல? தோட்டியின் கொழந்த படிக்கத் தொடங்கிட்டா அப்புறமா தோட்டியில்லாம ஆயுடும்னு பயந்தான்” (Sivasankarap Pillai, 2000).

தோட்டிகள் கல்வி கற்றால் இந்த சமூகத்தில் தோட்டிகளின் வாழ்வு உயரும் அதனால் தான் சுடலைமுத்து தோட்டிகளின் மகன் படிக்கக் கூடாதா என்று தனக்குத் தானே கேள்விக் கனையை எழுப்புகிறான். இதைப் போன்று சமூகத்தில் கீழ்நிலையில் இருக்கும் ஒருவன் கல்விக் கற்றால் அவர்களின் நிலை சமூகத்தில் உயரும் என்பதை புறநானூறு பாடல்கள் நமக்குத் தெளிவுப்படுத்துகின்றன.

“உற்றுவழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக என்னாது அவருள்

அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே” (Avvai duraisamy Pillai, 2009)

## தோட்டிகளுக்கு கல்வி மறுக்கப்படுதல்

சமூகத்தில் அனைவருக்கும் கல்வி என்ற நிலை உள்ளது. ஆனால் ஆலப்புழா கிராமத்தில் தோட்டிகளுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. அவர்களுக்கு கல்வி மறுக்கப்படுவதற்கு காரணம் அவர்கள் செய்யும் தொழிலே காரணமாக சுட்டிக் காட்டப்படுகிறது. ஊரில் உள்ள பெரியவங்க புள்ளைகளுக்கு எல்லாம் கல்வி கொடுக்கப்படுகிறது. மோகன் தோட்டியின் மகன் என்பதால் அவனுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. அதோடு ஆசிரியர் அந்தக் குழந்தைக்கு கல்விக் கற்றுக் கொடுப்பதை தீட்டாக கருதுகிறார் என்பதைக் கீழக்காணும் கூற்று மூலம் அறியலாம்.

“இங்கெ முடியாது தெரிஞ்சுதா? டேய் என்ன அக்கிரமம் இது? இந்தக் குழந்தைகள் பக்கத்தில் நீ உன் குழந்தையையும் உட்கார வைத்து விடலாமென்று நினைத்தாய் இல்லையாடா? நன்றாக இருக்கிறதே” (Sivasankarap Pillai, 2000).

இந்திய மக்கள் அனைவரும் கல்வி கற்றால் தான் உலக அரங்கில் இந்தியா வலிமை பெறும் என்ற எண்ணத்தில் அனைவருக்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்கிறது அரசு. ஆனால் கல்வி கற்பித்துக் கொடுத்தால் தீட்டாகிவிடும் என்று சமுகத்தினரால் தோட்டிகள் ஒதுக்கப்படுகிறார்கள். தோட்டிகள் கல்வி கற்றால் சமூகத்தில் தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதால் அவர்களுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. “கல்வியின் இன்றியமையாத பண்பு ஒரு மனிதனின் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவது. இந்த மாற்றம் அவன் வாழும் சமுதாயத்தில் செயல்படும் போது சமுதாயம் மாற்றம் அடைகின்றது”.

இந்த கூற்றிற்கு ஏற்ப சமூகத்தில் தோட்டிகள் படித்து விட்டால் தோட்டிகள் செய்யும் வேலையை யார் செய்வார்கள் என்ற எண்ணம் தான் தோட்டிகளுக்கு கல்வி மறுக்கப்படுகிறது என்பதை உணர முடிகிறது.

“தோட்டி தன் குழந்தையைப் பள்ளியில் படிக்க வைத்தான் என்பது இதுவரை நடந்திராத விஷயம் தோட்டியின் குழந்தையைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதில்லை எழுதி வைக்கப்படாத அந்த சட்டத்தை எப்படி உடைப்பது”. (Sivasankarap Pillai, 2000).

## தோட்டியின் குழந்தைகள் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்படுதல்

இந்தியாவில் தீண்டாமை தேச விரோத செயலாக கருதப்படுகிறது. அதைத் தடுக்கும் விதமாக தாழ்த்தப்பட்ட மக்களை சாதியின் பெயராலோ அல்லது அவர்கள் செய்யும் தொழிலின் பெயராலோ ஏளனம் செய்யக்கூடாது என்பதற்காக இந்திய அரசு 1955-ம் ஆண்டு “தீண்டாமை ஒழிப்புச் சட்டம்” கொண்டுவரப்பட்டது. இச்சமூகத்தில் தீண்டாமைக்கு அடிப்படை காரணமாக இருப்பது சாதியே. அதனால் தான் பாரதியார்

“சாதி பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்றே
தள்ளிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிர மாண்புறச் செய்வோம் (Usharani, 2019)

என்று பாரத நாட்டில் வாழும் மக்களிடம் சகோதர உணர்வு இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். ஆனால் தோட்டியின் மகன் புதினத்தில் கல்விநிலையம் செல்லும் மோகனைப் பார்த்து சக மாணவர்கள் மூக்கில் கைவைப்பதும் அதற்காக அவன் தன் அன்னையிடம் சண்டையிடுவதும் பார்க்க முடிகிறது. அது போல சமூகத்தில் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர் இறைவனுக்கு சமம். ஆனால் அந்த ஆசிரியர் தோட்டியின் மகனுக்கு படிப்பு எதற்கு என்று கேட்பது தீண்டாமையின் உச்சக்கட்டம் என்பதை அறியமுடிகிறது.

“நான் நாற்றேன்னு சொல்லிக்கிட்டு எல்லாப் பசங்களும் எம் பக்கத்திலிருந்து மூக்கைப் பொத்திக்கிட்டு ஓடுறாங்கம்மா” (Sivasankarap Pillai, 2000).

மோகனை தீண்டத்தகாதவர்களாக சக மாணவர்கள் ஏளனம் செய்வது ஒரு நாள் அல்ல தினமும் வாடிக்கையாகிவிட்டது மோகனுக்கு புதுஉடை போட்டாலும் மாணவர்கள் அவனை தீண்டாமையின் அடிப்படையில் ஏளனம் செய்வார்கள் என்பதை அறியலாம்.

“வள்ளி மகனுக்குப் புதுஉடை போட்டு அனுப்பினாள். அதனால் மட்டும் அந்தப் பையன்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு ஓடுவதை நிறுத்திவிடமாட்டார்கள். தாய் அவனைக் குளிப்பாட்டி நன்றாக உடை உடுத்தி என் அதிருஷ்டம் கெட்ட மவனே என்று வாய்விட்டு சொல்லி முத்தம் கொடுத்து கண்களில் நீர் தளும்ப வழி அனுப்பி வைத்தாள். அவன் வாழ்நாள் பூராவும் அந்த நாற்றம் அவனுடனையே இருக்கும். அதற்கு பின்னாலும் அவனுடன் ஒட்டிக் கொண்டிருக்குமோ?”. (ப-138) என்று தன் குழந்தையின் வாழ்வை நினைத்த வள்ளி கவலைப்பட்டு வேதனையின் உச்சத்திற்கே சென்றுள்ளாள் என்பதை அறியமுடிகிறது. மேலும் படிப்பு எல்லோருக்கும் பொதுவானது ஆசிரியர் நன்றாக புரியும்படி சொல்லிக் கொடுத்தால் மாணவர்களுக்கு பாடம் புரியும் அதை விட்டுவிட்டு படிக்காத மாணவர்களை அவர்களுடைய தொழிலின் அடிப்படையில் ஏளனம் செய்வது குழந்தையின் கல்வியை பாதிக்கும் என்ற அறிவுக்கூட இல்லாத நிலையில் ஆசிரியர் உள்ளார் என்பதை அறிய முடிகிறது.

“அவன் பெரிய புத்திசாலி இல்லாமலிருக்கலாம் இருந்தாலும் அவனுக்குத் தலையில் ஒன்றும் ஏறாது என்று சொல்வது - தோட்டியின் மகன் படிக்கச் சென்றுவிட்டால் இதுவும் கேட்க வேண்டும். அடி உதையும் வாங்கிக் கொள்ள வேண்டும்”.

அதனால் தான் தீண்டாமை மிகப் பெரிய பாவச்செயல் என்பதை உணர்ந்த பாரதிதாசன் தீண்டாமை என்ற பேய் இருக்கும் வரை இந்த தேசம் நலம்பெறாது என்று ஆதங்கப்படுகிறார்.

“தீண்டாமை என்றுமொரு பேய் இந்தத்

தேசத்தினில் மாத்திரமே திரியக் கண்டோம்” (Shanmugam, 2006)

## தோட்டிகளின் வாழ்வியல் விழுமியங்கள்

மனித வாழ்வியல் ஒரு லட்சியத்தையையும் அதன் அடிப்படையில் அமைகின்ற முன்னேற்றத்தையும் அதனால் வாழ்வில் ஏற்படுகின்ற நல்ல செயல்களையும் வாழ்வியல் விழுமியங்களாக கருதலாம். “மனிதனுடைய நம்பிக்கைகள் எண்ணங்கள் கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது”. (ta.m.wikipedia.org) தோட்டியின் மகன் புதினத்தில் இசக்கிமுத்து தோட்டியாக வேலைப்பார்க்க கூடியவன் அவனுக்கு ஒரே ஒரு ஆசைதான். தனக்கு பிறகு தன்னுடைய வேலையை தன் மகன் பார்க்க வேண்டும் என்று அவர் நினைத்தாற் போல அவருக்கு பிறகு அவருடைய மகன் தோட்டியாகிறான். சமூகத்தில் ‘தோட்டி’ என்ற தொழில் குலத் தொழிலாக உள்ளது. அதை சுடலைமுத்து உணர்கிறான். அதனால் தன்னை சுய பரிசோதனை செய்துக் கொள்கிறான். தனக்கு பிறகு தன்னுடைய குடும்பத்தில் யாரும் தோட்டியாக வாழக்கூடாது என்று நினைக்கிறான். அதற்காக தன்னுடைய வாழ்க்கை முறையை மாற்றி தோட்டிகள் போல் அல்லாமல் தினமும் குளித்து, நல்ல உணவு உண்டு குறிப்பாக தோட்டிகளின் சமூகத்தில் சுடலைமுத்துவைப் போல் ஒரு தோட்டியை பார்க்க முடியாது. உயர் சாதி வகுப்பினரின் வாழ்வை உற்று நோக்கி அதன் மூலம் தன் வாழ்க்கைக்கு விடைத் தேடுகிறான் ஆனால் இந்த சாதிவெறி பிடித்த சமூகம் அவனை வாழ விடுமா என்பது சந்தேகம் தான்.

“அவன் ஒழுங்காகத் தன் வேலையைச் செய்வான் எல்லோருக்கும் அவன் மீது சந்தேகம் தான். ஆனால் எல்லா வீட்டுக்காரர்களிடமும் அவன் கௌரவமாக நடந்துக் கொள்வான் பெரிய மனிதர்களைப் பார்த்து அவன் பல விஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறான்” (Sivasankarap Pillai, 2000).

சுடலைமுத்துவின் லட்சியம் தன் குடும்பம் ஆலப்புழா நகரில் தோட்டியாக வாழக்கூடாது என்பது அவனுடைய வாழ்வியல் விழுமியம் அதற்காக தன் மகனை படிக்க வைக்கிறான். நன்றாக உழைத்து பணமும் சேர்க்கிறான். ஆனால் ஆதிக்க வெறி பிடித்த சமூகம் அவனை ஏமாற்றுகிறது.

அதை சுடலைமுத்து உணர்ந்தவுடன் தனக்குத்தானே புலம்பத் தொடங்கிவிட்டான் என்பதை கீழ்க்காணும் தொடர்கள் மூலம் அறியலாம்.

"ஆமா அதுவும் சரிதான் இருந்தாலும் நான் அவனை ஒரு தோட்டிக்கு மவனாட்டம் வளர்க்க மாட்டேன். அது கண்டிப்புதான். அவன் தோட்டிக்கு மவனாகப் போயுட்டாலும் அவனுக்கு மவன் தோட்டியின் மவனாகப்படாது" (Sivasankarap Pillai, 2000).

## முடிவுரை

தோட்டியின் மகன் புதினத்தில் தோட்டிகளின் வாழ்வியல் எப்படிப்பட்ட போராட்டச் சூழ்நிலைகளில் நடைபெறுகிறது என்பதையும் மனிதனை மனிதனாக பார்க்கும் வாழ்வியல் அறம் தோட்டிகளின் வாழ்வில் எட்டாக் கனியாக உள்ளது. மனிதனுடைய அடிப்படை உரிமைகள் கூட தோட்டிகளுக்கு சமூகத்தில் மறுக்கப்படுகிறது. இவ்வுலகில் எல்லா உயிர்களும் சமமாக வாழ்வது உண்மையான வாழ்வியல் அறம். அதனால் தான் வள்ளுவர் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறுகிறார். இவ்வாய்வு மூலம் தோட்டிகளுக்கு சமூகத்தில் மறுக்கப்படும் வாழ்வியல் அறங்களை அறிந்து கொள்ளமுடிகிறது.

## References

Arulmani, S. (2020), Ilakkiya Saral, Prisat Publication, Chennai, India

Avvai duraisamy Pillai, (2009) Purananuru, Poompuhar Publications, Chennai, India

Meiyappan, S. (2009) Neethi Nool Thelivurai, Manivasagar Pathippakam, Chennai, India

Ramasamy, M. (1991) Thirukkural, Sree Indhu Publications, Chennai, India

Shanmugam, S.R (2006) Bharathidhasan Kavithaikal, Srisenbaga Pathipagam, Chennai, India

Sivasankarap Pillai, T. (2000) Thottiyin Magan, Kalachuvadu Publications, Nagercoil, India

Usharani, S. (2019) Bharathiar Kavithaikal, Vardhamanan Pathippagam, Chennai, India

Vasuki, C. (2007) Dalithiya Sikkalgalum Theervugalum, New Century Book House Private Limited, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License